# தலைச்சங்காடு

## அகழாய்வு அறிக்கை




பதிப்பாசிரியர்

முனைவர் **சீ. வசந்தி,** எம்.ஏ., எம்.பில்., பிஎச்.டி.,

ஆணையர் (பொறுப்பு)

ஆசிரியர்கள்

**கோ. முத்துசாமி**

**கோ. அர்ச்சுனன்**



தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை

2012, திருவள்ளுவராண்டு-2043

# தமிழக அகழாய்வுகள்
# தலைச்சங்காடு அகழாய்வு அறிக்கை
# (2010-2011)


பதிப்பாசிரியர்

முனைவர் **சீ. வசந்தி,** எம்.ஏ., எம்.பில்., பிஎச்.டி.,

ஆசிரியர்கள்

**கோ. முத்துசாமி**

**கோ. அர்ச்சுனன்**



தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை,

சென்னை - 600 008

2012, திருவள்ளுவர் ஆண்டு - 2043

## அச்சிட்டோர் விவரம்


| | | |
|---|---|---|
| முதற்பதிப்பு | : | 2012 |
| வெளியீடு எண் | : | 256 |
| நூலின் பெயர் | : | தலைச்சங்காடு அகழாய்வு அறிக்கை |
| பதிப்புரிமை | : | தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை |
| பதிப்பாசிரியர் | : | முனைவர் சீ. வசந்தி, எம்.ஏ., எம்.பில்., பிஎச்.டி., |
| ஆசிரியர்கள் | : | கோ. முத்துசாமி<br>கோ. அர்ச்சுணன் |
| மொழி | : | தமிழ் |
| எழுத்தின் அளவு | : | 13 புள்ளிகள் |
| தாள் அளவு | : | 80 ஜி.எஸ்.எம். மேப்லித்தோ |
| பிரதிகள் | : | 500 |
| பக்கங்கள் | : | 56 |
| விலை | : | ரூ. 82.00 |
| அச்சிட்டோர் | : | இராயப்பேட்டை எழுதுபொருள் (ம) அச்சு (ம) உபபொருட்கள் தயாரிப்பாளர்கள் தொழிற் கூட்டுறவு சங்கம் (வ.து)<br>26, கோயா அருணகிரி தெரு,<br>இராயப்பேட்டை, சென்னை - 14. |

தமிழக அகழாய்வுகள்

# தலைச்சங்காடு அகழாய்வு அறிக்கை (2010-2011)


| | | |
|---|---|---|
| பதிப்புரை | | பக்கம் |
| 1. முன்னுரை | | |
| 2. வரலாற்றில் தலைச்சங்காடு | ... | 1 |
| (அ) பூம்புகார் நில அகழாய்வு | | |
| (ஆ) பூம்புகார் கடல் அகழாய்வு | | |
| 3. தலைச்சங்காடு அகழாய்வு | ... | 11 |
| (அ) அகழாய்வுக் குழிகள் | | |
| (ஆ) மண்ணடுக்குகள் | | |
| 4. தொல்பொருட்கள் | ... | 18 |
| (அ) இரும்புப் பொருட்கள் | | |
| (ஆ) சுதைப் பொருட்கள் | | |
| (இ) மணிகள் | | |
| (ஈ) சங்குகள் | | |
| 5. சிற்பங்களும் கல்வெட்டுகளும் | ... | 27 |
| 6. முடிவுரை | ... | 32 |
| 7. பிற்சேர்க்கை | | |
| நிழற்படங்கள் | | |


முன் அட்டை : அகழ்வுக்குழி : I - இன் புறத்தோற்றம்
பின் அட்டை: அகழாய்வில் வெளிப்படுத்தப்பட்ட முதுமக்கள் தாழி மற்றும் தொல்பொருட்கள்

முனைவர் **சீ. வசந்தி,** எம்.ஏ.,எம்.பில்.,பிஎச்.டி.,
ஆணையர் (பொறுப்பு)

தொல்லியல் துறை,
தமிழ் வளர்ச்சி வளாகம்,
ஆல்சு சாலை,
சென்னை - 600 008.
நாள் : 22-08-2012

# பதிப்புரை

தமிழ்நாட்டின் வரலாற்றுச் சிறப்பினையும் பண்பாட்டுக் கூறுகளையும் வெளிப்படுத்த பெரிதும் துணை நிற்பவை மூலச் சான்றுகளான கல்வெட்டுகள், நாணயங்கள், அகழாய்வில் கிடைத்த தொல்பொருட்கள் மற்றும் நினைவுச்சின்னங்கள் போன்றவைகளாகும். அகழாய்வில் வெளிப்படுத்தப்படும் பொருட்கள் அக்காலத்தில் வாழ்ந்த மக்கள் பயன்படுத்திய பின்னர் விட்டுச் சென்றவைகளாகும். எனவே, பண்டைய சமுதாயத்தினைப் பற்றி தெரிந்து கொள்ள துணைபுரியும் அகழாய்வு, தமிழ்நாடு அரசு தொல்லியல் துறையால் 36 இடங்களில் நடத்தப்பட்டுள்ளன. இவ்வகழாய்வு அறிக்கைகள் நூலாகவும் வெளியிடப்பட்டு வருகின்றன.

தற்போது வெளியிடப்படும் தலைச்சங்காடு அகழாய்வு அறிக்கை 2010 - 2011 - ஆம் ஆண்டு தலைச்சங்காட்டில் மேற்கொள்ளப்பட்ட அகழாய்வில் கிடைத்தத் தொல்பொருட்களைப் பற்றியும், அகழாய்வுக் குறித்தும் விவரித்துக் கூறும் நூல். அகழாய்வில்

பங்கேற்றும், நூலாக்கமும் செய்த திரு. கோ. முத்துசாமி, மண்டல பதிவு அலுவலர், திருச்சி; திரு. கோ. அர்ச்சுணன், உதவி இயக்குநர், தஞ்சாவூர் ஆகியோருக்கும், இந்நூலை வடிவமைக்க உதவிய அச்சுக்கோர்ப்பாளர்கள் திருமதி. ச. சரஸ்வதி, திருமதி. கு. கோகிலா, அச்சுப்பிழைத் திருத்துபவர் திருமதி. கோ. கீதா, ஆகியோருக்கும் எனது உளம் கனிந்த பாராட்டுகள். தலைச்சங்காடு அகழாய்விற்கும் இந்நூல் வெளியிடுவதற்கும் நிதி ஒதுக்கீடு செய்த தமிழக அரசிற்கும் நன்றி.

தமிழக வரலாற்றினை ஆய்வு செய்யும் அனைவருக்கும் இந்நூல் பயனுள்ளதாக அமையும் என்பது உறுதி.

சி. வசந்தி

ஆணையர் (பொறுப்பு)

# முன்னுரை

மனித சமுதாயம் கடந்து வந்தப் பாதையைத் திரும்பிப் பார்க்கத் தமிழகத்தில் வரலாற்றுக்கு முற்பட்ட காலம் முதல், வரலாற்றுக் காலம் வரை பல இடங்களில் அகழாய்வுகள் பல்வேறு அமைப்புகள் மூலம் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அவற்றில் குறிப்பாக தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை, மத்திய அரசு தொல்லியல் துறை, பண்டைய வரலாறு மற்றும் தொல்லியல் துறை, சென்னைப் பல்கலைக்கழகம், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சை ஆகியவை குறிப்பிடத்தக்கவைகளாகும். சங்க இலக்கியங்கள் குறிப்பிடும் பெரு நகரங்களான பூம்புகார், கொற்கை, கரூர், மதுரை ஆகிய இடங்களில் மேற்கொள்ளப்பட்ட அகழாய்வுகளில் வெளிக்கொணரப்பட்ட சான்றுகள் தமிழக வரலாற்றினை சங்க காலம் முதல் அறிய துணைபுரிகின்றன. குறிப்பாக நாகை மாவட்டம், சீர்காழி வட்டம் பூம்புகாரில் நடைபெற்ற அகழாய்வில், புத்தவிகாரம், பிறை வடிவ கேணி, படகுத்துறை ஆகியவை குறிப்பிடத்தக்கவையாகும்.

பூம்புகாரின் அருகில் உள்ள பல ஊர்கள் சங்க இலக்கியங்களிலும், சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகியவற்றிலும் குறிப்பிடப்பட்டுள்ளன. பூம்புகார் அருகில் உள்ள தலைச்சங்காடு பற்றிய இலக்கியங்கள் குறிப்பிடும் செய்திகளின் அடிப்படையிலும், மேற்பரப்பு ஆய்வுகளில் கிடைத்த கருப்பு சிவப்பு நிறப் பானை ஓடுகள், கூரை ஓடுகள், துண்டு கல்வெட்டுகள் ஆகியவற்றினைக் கொண்டும் இங்கு அகழாய்வு மேற்கொள்ள திட்டமிடப்பட்டது. இதனை அடுத்து மத்தியத் தொல்லியல் துறையின் மத்திய ஆலோசனைக் குழு

கூட்டத்தில் அகழாய்வு மேற்கொள்ள ஒப்புதலும் பெறப்பட்டது. இதனை அடுத்து அங்கு அகழாய்வு மேற்கொள்ளப்பட்டது. இவ்வாய்வில் கிடைத்த தொல்பொருட்கள் பற்றியும், அகழாய்வுக் குறித்தும் இந்நூல் விவரித்துக் கூறுகின்றது.

அன்புடன்

**கோ. முத்துசாமி**

**கோ. அர்ச்சுணன்**

# வரலாற்றில் தலைச்சங்காடு

## இருப்பிடம் :

நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி வட்டத்தில் பூம்புகார் அமைந்து உள்ளது. இவ்வூருக்கு காவிரிப்பூம்பட்டினம் என்ற பெயரும் வழங்கப்படுகிறது. பூம்புகாருக்கு செல்கின்ற பயணிகள் மயிலாடுதுறை அல்லது சீர்காழி இரயில்நிலையத்தில் இறங்க வேண்டும். சென்னையிலிருந்து செல்கின்ற பயணிகள் சீர்காழியிலிருந்தும், மயிலாடுதுறையில் இருந்தும் பேருந்துகள் மூலம் பூம்புகாரை அடையலாம். பூம்புகார், சீர்காழியிலிருந்து 23 கி.மீ. தொலைவிலும், மயிலாடுதுறையிலிருந்து 25 கி.மீ. தொலைவிலும் அமைந்து உள்ளது. சென்னை நகரிலிருந்து சொந்த ஊர்திகளில் செல்வோர் திண்டிவனம், பாண்டிச்சேரி, கடலூர், சீர்காழி ஆகிய ஊர்களின் வழியாக பூம்புகாரை அடையலாம். பூம்புகாரில் சுற்றுலாத் துறையின் தங்கும் விடுதிகளும் தனியார் உணவகங்களும் உள்ளன.

## தொன்மை வரலாறு :

பூம்புகார் 2000 ஆண்டுகட்கு முன்பு சோழர்களின் தலைநகரமாகவும், தலைசிறந்த துறைமுகப் பட்டினமாகவும் திகழ்ந்தது. பூம்புகார் என்றால் காவிரி கடலில் புகும் இடமாகும். இந்நகரம் நான்கு காதம் சுமார் 40கி.மீ தூரம் வரை பரவியிருந்தது என ஆய்வில் தெரிய வருகின்றது. பூம்புகார், காவிரிப்பூம்பட்டினம், காகந்தி, சம்பாபதி, பல்புகழ்மூதூர், மண்ணகத்து வான்பதி, சோழப்பட்டினம், கபேரிஸ்எம்போரியம், கோலப்பட்டினம் என்று பல பெயர்களால் அழைக்கப்பட்டுள்ளது. சங்க இலக்கியங்களான அகநானூறு, புறநானூறு, பட்டினப்பாலை, சிலப்பதிகாரம், மணிமேகலை போன்றனவும், மிளிந்தபணா என்னும் பிராகிருத நூலும், புத்தஜாதகக் கதைகள், புத்தவம்சார்த்த கதா ஆகிய பௌத்த நூல்களும், தாலமி,

பிளினி, பெரிபுளூஸ் போன்ற மேலை நாட்டு அறிஞர்களின் பயணக் குறிப்புகளும் பண்டைய பூம்புகாரின் வரலாற்றை அறிந்து கொள்ளப் பெருந்துணைப்புரிகின்றன. கண்டரத்தனார், காரிக்கண்ணனார், சேந்தங்கண்ணனார், செங்கண்ணனார், நப்பூதனார் போன்ற சங்ககாலப் புலவர்கள் பூம்புகாரைச் சேர்ந்தவர்கள் ஆவார்கள். சிலம்பின் கோவலன், கண்ணகி இந்நகரைச் சேர்ந்தவர்கள் என்பதும் அறிந்ததே. வடஇந்தியாவிலுள்ள பார்குத் என்ற இடத்தில் கி.மு. 2-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த புத்த ஸ்தூபி உள்ளது. இந்த ஸ்தூபி மிக அழகாகவும், அழகிய சிற்பங்களாலும் வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்த ஸ்தூபிக்கு காகந்தியைச் சேர்ந்த சோமா என்பவர் கொடை அளித்துள்ளார். காகந்தி என்பது பூம்புகாரின் மற்றொருப் பெயராகும். கி.மு. 2-ஆம் நூற்றாண்டிலேயே பூம்புகாரில் புத்த சமயம் சிறப்புற்று விளங்கியதை அறிய முடிகின்றது. கி.பி. 2-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த பல்லவ மன்னன் முதலாம் மகேந்திரவர்மன் காலத்து நடுகல் கல்வெட்டு திருவண்ணாமலை மாவட்டம், செ.கடலூர் என்ற ஊரில் உள்ளது. இக்கல்வெட்டில் காகண்டியைச் சேர்ந்த அண்ணாலன் என்பவன் ஆனிரைகளை மீட்டு வீரமரணமடைந்தான் என்று தெரிவிக்கின்றது. காகண்டி என்பது காகந்தியின் திரிபாக இருக்கலாம் என்று திரு. நடன. காசிநாதன் கூறியுள்ளார். இங்கு வானளாவிய கட்டடங்களும், வைணவ, சைவ, பௌத்த, சமணக் கோயில்களும் இருந்ததாக சங்க இலக்கியங்கள் கூறுகின்றன.

சங்ககால பூம்புகார், 1. மருவூர்ப்பாக்கம், 2. பட்டினப்பாக்கம், 3. நாளங்காடி என்று மூன்று பெரும் அமைப்புகளாக சிறந்து விளங்கி வந்துள்ளது. கடற்கரையும், அதனை ஒட்டி அமைந்த பகுதியும் மருவூர்ப்பாக்கம் என்று அழைக்கப்பட்டது. மருவூர்ப்பாக்கத்திற்கு மேற்கே அமைந்த பகுதி பட்டினப்பாக்கம் என அழைக்கப்பட்டது. இந்த இரண்டு பகுதிகளுக்கு நடுவில் பெரும் மரங்கள் சூழ்ந்த பகுதியாக நாளங்காடி விளங்கியுள்ளது. புகாரில் இலவந்திகைச் சோலை, உண்ணாவனம், சம்பாபதிவனம், உவவனம் ஆகிய சோலைகளும் வெள்ளிடை மன்றம்,

பாவை மன்றம், நெடுங்கல் மன்றம், இலஞ்சி மன்றம், கொற்றப்பந்தல் போன்ற மன்றங்களும் இருந்தன. பூம்புகாரை நெய்தலங்கானத்து, இளஞ்சேட்சென்னி, சேட்சென்னி, நலங்கிள்ளி, கிள்ளிவளவன், கரிகால்சோழன் போன்ற மன்னர்கள் ஆட்சிப்புரிந்தனர், பூம்புகார் நகரம் கிரீஸ், ரோம், சீனம், மெசபடோமியா, பாபிலோனியா, எகிப்து, பாலஸ்தீனம் போன்ற நாடுகளுடன் வாணிப தொடர்பு கொண்டிருந்தது. பூம்புகாரில் மக்கள் பசியின்றி, நோயின்றி வளமுடன் வாழ மழை நீர்வளத்தை வேண்டி இந்திரனுக்காக எடுப்பித்த “ இந்திரவிழா ” மிகச் சிறப்பாக நடைபெற்றுள்ளது.

பூம்புகாரில் பல நாட்டுப் பொருட்கள் விற்பனைக்கு வைக்கப்பட்டு இருந்ததை பட்டினப்பாலை எடுத்துக் கூறுகின்றது. “ வடமலைப் பிறந்த மணியும், பொன்னும், குடமலைப் பிறந்த ஆரமும், அகிலும், தென்கடல் முத்தும் குணகடற்றுகிரும், கங்கைவாரியும், காவிரிப்பயனும், ஈழத்து உணவும், காழகத்து ஆக்கமும், அரியவும், பெரியவும், நெரியஈண்டி வளர்தலை மயங்கிய நனந்தலை ” என்று பலநாட்டுப் பொருட்களைக் குறிக்கின்றது.

பூம்புகார் நகரம் பல நாட்டுக் கலைஞர்கள், வணிகர்கள் வாழ்ந்த புகழ்பெற்ற நகரமாகத் திகழந்துள்ளது. பல நாட்டுக் கைவினைஞர்கள் கூடிச் செய்த பசும்பொன் மண்டபம் ஒன்று இங்கு இருந்ததை மணிமேகலை தெரிவிக்கின்றது. இதனை மகதவினைஞர், மராட்டகம்மியர், அவந்திக்கொல்லர், யவனதச்சர், தமிழ்நாட்டுக் கைவினைஞர்கள் கூடிச் செய்தனர் என்று குறிப்பிடுகின்றது.

தாய்லாந்து நாட்டில் தகுவா-பா என்ற இடத்தில் கி.பி. 9-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த பல்லவ மன்னன் மூன்றாம் நந்திவர்மன் காலத்து தமிழ் கல்வெட்டு உள்ளது. இந்தக் கல்வெட்டில் நாங்கூர் நாட்டை சேர்ந்த வணிகக் குழுவினரான மணிக்கிராமத்தார் என்பவர்கள் “அவனிநாரணம் ” என்ற ஏரியை வெட்டியதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. நாங்கூர், மணிக்கிராமம் ஆகிய ஊர்கள் பூம்புகாருக்கு மிக அருகில்

உள்ள ஊர்களாகும். பூம்புகாரைச் சேர்ந்தவர்கள் (அயல் நாட்டுடன்) தாய்லாந்துடன் கொண்டிருந்த வாணிபத் தொடர்பை இது எடுத்துக் கூறுகிறது.

தஞ்சையில் முதலாம் இராஜராஜன் தான் கட்டிய பெரியக் கோயிலுக்குத் தமிழ்நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் நாட்டிய மங்கையர்களைக் கொண்டு வந்து நடனமாட வைத்தான். அதற்காகப் பெரிய கோயிலைச் சுற்றிலும் உறைவிடம், உணவு, ஊதியம் கொடுத்து ஆதரித்தான். நாட்டிய மங்கைகளில் நக்கன் தாரி, நக்கன் அரங்கம், ஆகிய இருவரும் பூம்புகாரைச் சேர்ந்தவர்களாவர். இயற்பகைநாயனார், திருவெண்காடர் (பட்டினத்தார்) போன்ற அருளாளர்களும் பூம்புகாரைச் சேர்ந்தவர்கள். கி.பி. 12-13-ஆம் நூற்றாண்டில் சோழராட்சி வலுவிழந்து பாண்டியர் ஆதிக்கம் பெற்றனர். அவர்கள் உறையூர், கங்கைகொண்ட சோழபுரம், பழையாறைப் போன்ற சோழர்களின் தலைநகராக விளங்கிய நகரங்களை அழித்ததாக பாண்டிய மன்னர்கள் தாங்கள் பெற்ற வெற்றிகளை மெய்கீர்த்திகளாக கல்வெட்டுகளில் கூறியுள்ளனர். எனவே பூம்புகாரும் அழிவிலிருந்து தப்பவில்லை. கி.பி. 13-ஆம் நூற்றாண்டில் முதலாம் மாறவர்மன் சுந்தரபாண்டியன் பூம்புகாரில் தரைமட்டமாக எல்லாம் அழித்துவிட்டு, புலவர் கடியலூர் உருத்திரங்கண்ணனார் கரிகாலச்சோழனிடம் பரிசாகப் பெற்ற 16 கால் மண்டபத்தின் அழகைப் பார்த்து அதை மட்டும் அழிக்க மனமில்லாமல் விட்டு வைத்தான் என்ற செய்தியை அவனது திருவெள்ளறைக் கல்வெட்டு தெரிவிக்கின்றது.

சாயாவனத்து, மூன்றாம் குலோத்துங்கனின் கல்வெட்டு இராசாதிராச வளநாட்டு, நாங்கூர்நாட்டு காவிரிப்பூம்பட்டினம் என்றும் கி.பி. 16-17-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த விஜயநகர் காலத்துப் பல்லவனீச்சுரம் கல்வெட்டு சாய்க்காட்டு சீர்மை காவிரிப்பூம்பட்டினம் என்றும் தெரிவிக்கின்றது. எனவே, பரந்து விரிந்த பூம்புகார் நகரம் நாங்கூர் நாட்டுக்கு உட்பட்ட சிறிய ஊராக மாறிவிட்டதும், மேலும்

திருக்கடையூர் கல்வெட்டு ஒன்று அக்கோயிலின் அணிகலன்களையும், பாத்திரங்களையும், பாதுகாக்க காவிரிப்பூம்பட்டினத்துப் பெருமக்களை மன்னன் அமர்த்தினான் என்பதுவும் தெரிகின்றது.

பூம்புகார் மற்றும் அதனைச் சுற்றியுள்ளப் பகுதிகளில் மேற்பரப்பு ஆய்வு செய்த வகையில் பண்டைய பூம்புகாரின் நான்கு எல்லைகளை நாம் வரையறை செய்யமுடிகிறது. அவ்வகையில் தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை செய்த ஆழ்கடலாய்வின் மூலம் பண்டைய நாளில் கடல்கொண்டு அழிந்த பூம்புகாரின் தடயங்கள் 6 கி.மீ. வரை கடலில் காணப்படுவது தெரியவருகிறது. இதன் மூலம் கீழக்கொல்லை கடல் பகுதியில் 6 கி.மீ. வரை இருந்துள்ளதை உறுதி செய்யமுடிகிறது. வடக்கெல்லையாக வடக்கே காரைமேடு - மணல்மேடு என்ற ஊர் உப்பநாற்றின் கரையில் அமைந்துள்ளது. இவ்வாற்றின் கரையில் 2 கி.மீ. நீளத்திற்கு மணல் திட்டுகள் காணப்படுகின்றன. இந்த மணல் திட்டுகளில் முற்காலத்தில் மன்னர்கள் மற்றும் படைத் தலைவர்கள் போன்ற முக்கிய நிலையில் வாழ்ந்து மறைந்தவர்களை முதுமக்கள் தாழிகளில் வைத்து அடக்கம் செய்துள்ளனர். இந்தப் பகுதியில் நூற்றுக்கும் மேற்பட்ட தாழிகளை மேற்பரப்பில் காணமுடிகிறது. இத்துறையின் மூலம் அப்பகுதியில் களஆய்வு செய்து முதுமக்கள் தாழிகள், மக்கிய எலும்புகள், பெருங்கற்காலத்தைச் சார்ந்த கலயம், கிண்ணம், அகல்விளக்கு, இரும்புப் பொருட்களான நெடுவாள் போன்றன சேகரித்து வந்து பூம்புகார் அகழ்வைப்பகத்தில் வைக்கப்பட்டுள்ளன. இச்சான்றுகளால் பண்டையப் பூம்புகாரின் வடக்கெல்லை உப்பநாற்றுக்கரை எனத் தெளிவாகின்றது.

காவிரியின் கரையில் அமைந்த பழைய சோழர் பெருவழியில் தற்போதைய பூம்பூகாரிலிருந்து மேற்காக 15 கி.மீ. தூரத்தில் புஞ்சை என்ற ஊர் அமைந்துள்ளது. புஞ்சைக்கு அருகில் தொன்மை காலத்தில் உப்பு வணிகமும், மிளகு வணிகமும் பெருவணிகமாக நடந்துள்ளதற்கு சான்றுகள் கிடைக்கின்றன. எனவே இவ்வூரை பண்டைய பூம்புகாரின்

மேற்கெல்லையாகக் கருதமுடிகிறது. தெற்கெல்லையாகத் திருக்கடையூரை அடுத்து தரங்கம்பாடியை ஒட்டியுள்ள மாணிக்கப்பங்கு என்ற ஊரைக் கருதமுடிகிறது. ஆடற்கலை அரசி மாதவியின் பிறந்த ஊர் திருக்கடவூர், மாதவிக்காக அரசனால் மானியமாக வழங்கப்பட்ட ஊர் தான் மாணிக்கப்பங்கு என்ற ஊர் ஆகும். இவ்வாறு சிலப்பதிகாரத்தில் கூறப்பட்டுள்ள நான்கு காத தூரம் அதாவது இன்றைய நிலையில் ஏறத்தாழ 40 கி.மீ. தூரம் மேற்குறிப்பிட்ட எல்லை வரம்புக்குள் வருவதால் தொன்மைப் பூம்புகாரின் நான்கு எல்லையாக முறையே கிழக்கே கடலும், வடக்கே உப்பனாறும், மேற்கே கிடாரங்கொண்டானும், (புஞ்சை) தெற்கேயுள்ள மாணிக்கப்பங்கிற்கும் உட்பட்ட பகுதியே தொன்மையான பூம்புகாரின் எல்லைகளாகக் கருத முடிகிறது.

## நில அகழாய்வு

பூம்புகாரில் 1910-ஆம் ஆண்டு முதலே ஆய்வுப் பணிகள் தொடங்கப்பட்டன. 1963-64-ஆம் ஆண்டில் மத்திய தொல்லியல் துறையைச் சார்ந்தவர்களும், சென்னைப் பல்கலைக் கழகப் பேராசிரியர் டாக்டர் கே.வி. இராமன் அவர்கள் மேற்பார்வையிலும் அகழாய்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. கீழையூரைச் சேர்ந்த மங்கைமடம் என்ற இடத்தில் பண்டையப் படகுத்துறை கண்டுபிடிக்கப்பட்டது. இதன் முன்புறத்தில் இரண்டு மரத் தூண்கள் காணப்பட்டன. இந்த மரத் தூண்கள் படகுகளை இழுத்துக் கட்டுவதற்கு பயன்படுத்தப்பட்டன. பூம்புகாரில் பல்லவனீச்சுரம் என்ற இடத்தில் புத்தவிகாரம் கண்டுபிடிக்கப்பட்டது. புத்தவிகாரம் என்பது புத்ததுறவிகள் தங்கும் இடமாகும். பூம்புகாரில் நடைபெற்ற அகழாய்வுகளில் இது முக்கிய கண்டுபிடிப்பாகும். இந்த புத்தவிகாரம் சிறிய அறைகளுடன் சுண்ணாம்பு, செங்கற்களைக் கொண்டு கட்டப்பட்டுள்ளது. ஆந்திர மாநிலத்திலுள்ள அமராவதி, நாகார்ஜுனகொண்டா போன்ற புத்தவிகாரங்களைப் போல் இதுவும் காணப்படுவதாக டாக்டர் கே. வி. இராமன் அவர்கள் கூறியுள்ளார்.

ஆந்திராவில் உள்ள பால்நாடு (பளிங்குகல்) என்ற வகை கல்லினால் அமையப் பெற்ற புத்தபாதம் கிடைத்துள்ளது. இதில் இரண்டு காலடிகள், ஸ்வஸ்திகம், ஸ்ரீவத்சம், பூரணகலசம் போன்றவை பொறிக்கப்பட்டுள்ளன. இவைகளைப் புத்தபீடிகை என்று நூல்கள் கூறுகின்றன. கி.பி. 4-ஆம் நூற்றாண்டில் உறையூரைச் சேர்ந்த புத்ததத்தர் என்பவர் அபிதம்மாவதாரம் என்ற நூலை எழுதியுள்ளார். இது பாலி மொழியில் எழுதப்பட்டதாகும். புத்ததத்தர், கணதாசன் என்பவர் சோலைகள் நிறைந்த காவிரிப்பூம்பட்டினத்தில் அமைந்திருந்த புத்தப்பள்ளியில் இந்நூலை எழுதியதாக குறிப்பிட்டுள்ளார். அகழாய்வில் பல்லவனீச்சுரம் பகுதியில் கண்டுபிடிக்கப்பட்ட புத்தவிகாரம் இதுவாகவே இருக்கலாம் என்று கருதப்படுகிறது. இவ்விடத்தில் செங்கல், சுதையாலான தூண்கள் கிடைத்துள்ளன. புகாரில் புலி உருவம் பொறிக்கப்பட்ட செம்பாலான சங்ககால சோழர் காசு கிடைத்துள்ளது. வானகிரி என்ற இடத்தில் பண்டைய கால நீர்த்தேக்கம் ஒன்றும் அகழ்வில் கண்டுபிடிக்கப்பட்டது.

இந்த நீர்த்தேக்கத்திற்கு காவிரியிலிருந்து நீர் வருவதற்கான கால்வாய் ஒன்று இருந்திருக்க வேண்டும். வெள்ளையனிருப்பு என்ற இடத்தில் ரோமானிய நாணயம் கண்டுபிடிக்கப்பட்டது. எனவே அகழாய்வு மூலம் இலக்கியங்களில் கூறப்பட்டுள்ள செய்திகள் உறுதி ஆகியுள்ளன என்பது தெளிவாகிறது.

## தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை மேற்கொண்ட நில அகழாய்வுகள்

தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை 1995-ஆம் ஆண்டு முதல் 1998-ஆம் ஆண்டு முடிய பூம்புகாரில் பல பகுதிகளில் அகழாய்வுப் பணியை மேற்கொண்டது. 1995-ஆம் ஆண்டில் பணியைத் தொடங்கினர். (1) மேலையூர் அருள்மிகு பிரியவிடங்கர் என்ற சிவன்கோயிலின் பின்புறத்தில் 4x4 மீ. அளவில் குழி தோண்டப்பட்டது.

இங்கு தெற்கு வடக்காக செங்கற்களால் கட்டப்பட்ட சுவரின் பகுதி தென்பட்டது. இது கி.பி. 16-17-ஆம் நூற்றாண்டின் நாயக்கர் காலத்தைச் சேர்ந்ததாகும். இச்சுவர் இக்கோயிலின் பழையத் திருச்சுற்றின் அடிச்சுவராக இருக்கலாம் என்று கருதப்படுகிறது. (2) சாயாவனம் காளியம்மன்தோப்பு என்ற இடத்தில் மேற்கொண்ட அகழாய்வில் இடைக்கால பானை ஓடுகளும், கெண்டி மூக்குகளும் சேகரிக்கப்பட்டன.

இரண்டாம் கட்டமாக 1995-96-இல் (3) மணிக்கிராமம் கிழார்வெளி என்ற இடத்தில் திரு. ராமசாமி கோனாரின் நன்செய் நிலத்தில் மேற்கொண்ட அகழாய்வில் பண்டையப் படகுத்துறை கண்டுபிடிக்கப்பட்டது. இந்த படகுத்துறையில் உள்ள செங்கல்லின் அளவு நீளம் 2 அடி, அகலம் 1 ½ அடி, கனம் 8 அங்குலம் ஆகும். இங்கு சுடுமண்ணாலான புத்தர் திருவடி ஒன்று கண்டுபிடிக்கப்பட்டது. மேலும் இலை, பறவை, குதிரை, படகு உருவம் பொறித்த ரோமானிய பானை ஓடுகள் கிடைத்துள்ளன. இந்த படகுத்துறையின் காலம் கி.மு. 4 - ஆம் நூற்றாண்டாக இருக்கலாம் என்று ஆய்வாளர்களால் கணிக்கப்பட்டுள்ளது. உப்பை நெல்லுக்கு விற்று அதை ஏற்றி வந்த படகுகள் மரத்தறிகளிலே கட்டப்பட்டிருந்தன என்பதைப் பட்டினப்பாலை

“ நெல்லொடு வந்த வல்வாய்ப்பஃறி
பனைநிலைப்புரவியின் அனைமுதல் பிணிக்கும்
கழி சூழ் படப்பை நன்நகர் ”

என்று குறிக்கின்றது. மூன்றாம் கட்டமாக அகழாய்வுப் பணியை கிழார்வெளியில் மேற்கொண்டு படகுத்துறை முழுப்பகுதியையும் வெளிக்கொணர்ந்தனர்.

(4) மணிக்கிராமத்தில் பனைமரத்தடி தோப்பு என்ற இடத்தில் 4x4 மீ. அளவில் அகழாய்வு குழி போடப்பட்டது. இங்கு ஏராளமான கருப்பு, சிவப்பு, பச்சை, மஞ்சள், ஆகிய நிறங்களில் மணிகள் கிடைத்தன. மணிகள் செய்வதற்குரிய மூலப்பொருட்கள் வண்ணக்கட்டிகள் கிடைத்தன. அடுப்பின் ஒரு பகுதி கிடைத்தது. இவ்வகழ்வாய்வில் ரோம்

நாட்டு ரௌலட்டட் பானை ஓடுகள் சேகரிக்கப்பட்டன. இங்கிருந்துதான் மணிகள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டிருக்க வேண்டும். நாங்கூர் என்ற ஊர் மணிக்கிராமத்தின் அருகில் உள்ளது. இங்கு கிடைத்த தொல்பொருட்கள் கி.பி. 2 – ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவை. நான்காம் கட்டமாக 1997-98 – ஆம் ஆண்டில் (5) வானகிரி அருகில் தோசக்குளம் மேடு, (6) கீழையூர், சித்தங்காத்தன் கோயில் திடல், (7) மேலையூரைச் சேர்ந்த அய்யனார்திடல், மேலையூர், அடைக்கலபுரம் ஆகிய இடங்களிலும் அகழாய்வுப் பணியை மேற்கொண்டனர். இவற்றில் வானகிரி தோசக்குளம் என்ற இடத்தில் மேற்கொண்ட அகழாய்வு பூம்புகார் வரலாற்றுக்கு முக்கிய திருப்புமுனையாக அமைந்தது. இங்கு 4X4 மீ. அளவில் மூன்று குழிகள் போடப்பட்டன. இங்கு குழி எண் 13-இல் பிராகிருத சொல் எழுதப்பட்ட பிராமி எழுத்துப் பொறிப்புள்ள பானை ஓடு கிடைத்தது. சங்க காலத்தில் முக்கிய நகரங்களான உறையூர், கரூர், கொற்கை போன்ற இடங்களில் மேற்கொண்ட அகழாய்வுகளில் பிராமி எழுத்துப்பொறிப்புள்ள பானை ஓடுகள் கிடைத்துள்ளன. பூம்புகாரில் இவ்வகை பானை ஓடு வானகிரி தோசக்குளம் பகுதி அகழாய்வில் முதன்முதலில் 1997-98-ஆம் ஆண்டிலேயே கண்டுபிடிக்கப்பட்டது. திரு. நடன. காசிநாதன் அவர்கள் இச்சொல்லை "(அ) ஹாபாகேதரோ" என்று படித்துள்ளார்.

## கடல் அகழாய்வு

1981-ஆம் ஆண்டில் பூம்பூகார் கடலில் முதற்கட்ட ஆய்வை தமிழ்நாடு அரசு தொல்லியல் துறையும், கோவாவில் உள்ள தேசிய கடலாய்வு நிறுவனமும் சேர்ந்து கடல் அகழ்வு ஆய்வை மேற்கொண்டன. இந்த ஆய்வில் சைடுஸ்கேன் சோனார், எக்கோசவுண்டர், மேக்னடோமீட்டர் ஆகிய கருவிகள் பயன்படுத்தப்பட்டன. இரண்டு முதல் 3 மீட்டர் உயரமுள்ள சில பொருட்கள் கடலுக்கடியில் இருப்பது கண்டறியப்பட்டது. 1990-91-ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 25-ஆம் நாளில் பெருமளவில் இரண்டாவது கட்ட ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. பூம்புகார் கடற்கரையிலிருந்து சுமார் 5 கி.மீ. தொலைவில் 70 அடி

ஆழத்தில் பண்டைய காவிரி ஆற்றின் வடக்குகரையையொட்டி மூன்று கட்டப்பகுதிகளும், தெற்கு கரையையொட்டி இரண்டு கட்டடப் பகுதிகளும் கண்டுபிடிக்கப்பட்டன. வடக்குக் கரையில் உள்ள கட்டடம் ஒரு கோயிலாகவோ, கோட்டைக் கொத்தளமாகவோ, புத்தவிகாரமாகவோ இருக்கலாம் என்று கருதப்படுகிறது.

மேலும் கடற்கரையையொட்டி 200 மீ தொலைவில் கடலினுள் 7 அல்லது 8 அடி ஆழத்தில் கட்டடப் பகுதிகள் தொடர்ந்து இருப்பதும் கண்டுபிடிக்கப்பட்டது. இப்பகுதியில் கி.பி. 2-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த கருப்பு-சிவப்பு பானை ஓடுகள் கிடைத்துள்ளன. பூம்புகாரின் தென்பகுதியில் காவிரியாறு கடலினுள் தற்போது கலக்கும் இடத்திற்கு எதிரே 4 கி.மீ. தொலைவில் தரை தட்டி உடைந்த கப்பல் மூழ்கியிருப்பதும் கண்டறியப்பட்டது. இக்கப்பல் கி.பி. 18-ஆம் நூற்றாண்டைச் சார்ந்ததாகும். இக்கப்பலிலிருந்து சில ஈயக்கட்டிகள் வெளிக் கொணரப்பட்டு உள்ளன. இக்கப்பலில் ஒரு பீரங்கி இருப்பதும், வெடிமருந்து அடங்கிய பெட்டி இருப்பதும் தெரியவந்துள்ளன. கடலகழாய்வில் கிடைத்துள்ள கட்டடப் பகுதிகள், பானை ஓடுகள் போன்ற தொன்மை பொருட்கள் பல இடங்களிலும் பரவி இருப்பதன் மூலம் பூம்புகார் நகரின் ஒருபகுதி கடலால் கொள்ளப்பட்டது உண்மை தான் என்ற விபரம் தெரிய வருகிறது.

இவ்வாறு சங்க இலக்கியங்கள் மூலமாகவும் சோழர் மற்றும் பாண்டியர்களின் கல்வெட்டுச் செய்திகள் வாயிலாகவும் பூம்புகார் நாட்டின் அக்கால வரலாற்றினை உணர முடிகிறது. இவ்வாறு சிறப்பு வாய்ந்த பண்டையப் பூம்புகாரின் ஒரு பகுதியாக தொன்று தொட்டுத் தலைச்சங்காடு எனும் பேரூர் அமைந்து வந்துள்ளது.

❋ ❋ ❋

# தலைச்சங்காடு அகழாய்வு

தலைச்சங்காடு தொன்மை பூம்புகாரின் ஒரு பகுதியாக விளங்கியுள்ளது. இவ்வூரில் மூன்று சிவன் கோயில்கள், மூன்று பெருமாள் கோயில்கள். மூன்று அம்மன் கோயில்கள், மூன்று விநாயகர் கோயில்கள் மற்றும் பல கிராம தேவதையின் கோயில்கள் இருந்துள்ளன. இவற்றில் சில அழிந்து விட்டன. பல திருக்குளங்கள் அழியாமல் இன்றும் உள்ளன. சிலம்பில் குறிப்பிடப்படும் - மாடல மறையோன் - எனும் தலைவன் இவ்வூரில் பெரிய பதவியில் சிறப்புடன் வாழ்ந்தவர் என்பதும் தெரிகிறது. இன்று வருவாய் துறையினர் இவ்வூரை "தலையுடையவர் கோயில் பத்து" - என்று வழங்கி வருகின்றனர். எனவே தொன்று தொட்டு - தலைச்சங்காடு வரலாற்றுச் சிறப்பு மிக்க - பேரூராகவேத் திகழ்ந்து வருகிறது.

## அகழாய்வுக் குழிகள்

தலைச்சங்காடு அரசு நடுநிலைப் பள்ளி பின்புறம் அமைந்த நிலப் பகுதியில் தலைச்சங்காடு ஊரின் தொன்மையையும், வரலாற்று சிறப்பையும் அறியும் பொருட்டு அகழாய்வு மேற்கொள்ள இந்த இடம் தெரிவு செய்யப்பட்டது. மேற்பரப்பு ஆய்விலேயே அதிக அளவு உடைந்த பழமையான செங்கல் துண்டுகளும், கூரை ஓடுகளும், வளையல்களுக்காக அறுத்த சங்குத் துண்டுகளும் காணப்பட்டதால், இந்த நிலப்பரப்பையே ஆய்விற்கு உகந்தது எனக் கருதி அகழ்வுக் குழிகள் அமைக்கும் பணி தொடங்கப்பட்டது. இப்பகுதியில் இரண்டு அகழ்வுக் குழிகளும், இதனை அடுத்துள்ள கழிக்குளம் கரையை ஒட்டி அமைந்துள்ள மேட்டுப் பகுதியில் மூன்று மாதிரி அகழ்வுக் குழிகளும் போடப்பட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டன.

அறிவியல் முறைப்படி மேற்கொண்ட தலைச்சங்காடு அகழாய்வில் சிதைந்த செங்கல் கட்டட பகுதியும் உடைந்த செங்கல் துண்டுகளும், கூரை மேல் வேயப்படும் ஓடுகளும், சொர சொரப்பான பானை ஓடுகளும்,

கருங்கல்லால் ஆன கட்டடப் பகுதிகளும், மேலும் மாதிரி அகழாய்வுக் குழிகளில் சங்க கால தொல்பொருட்களும் முதுமக்கள் தாழிகளும் சேகரிக்கப்பட்டன.

## அகழாய்வுக் குழி – 1 (TKU - 1)

தலைச்சங்காடு என்பதன் சுருக்கமாக TKU என ஆய்வுக் குழிக்கு பெயரிடப்பட்டது. 4 x 4 மீ. அளவில் அகழாய்வுக் குழி அமைக்கப்பட்டது. கிழக்கு மேற்காக 0.05 செ.மீ அகலத்தில் ஒரு மீட்டர் இடைவெளியில் 0 - IV எண்கள் போடப்பட்ட முளைக்குச்சிகள் நடப்பட்டன. அதேபோல் மேற்குப் பகுதியில் $0^1$ - $IV^1$ வரை எண்கள் இடப்பட்ட முளைக்குச்சிகள் அதே 50 செ.மீ அகலத்தில் ஒரு மீட்டர் இடைவெளி விட்டு மீட்டருக்கு ஒன்றாக 4 முளைக்குச்சிகள் ஒரே அளவினதாக நடப்பட்டன. இம்முளைக்குச்சிகள் கிழக்குப் பகுதியிலும், மேற்குப் பகுதியிலும் நடப்பட்டு, சுற்றுபுறப் பகுதியிலும் நன்கு தூய்மை செய்து 4 x 4 மீட்டர் அளவிற்கு உட்பட்ட பகுதியில் அகழாய்வுப் பணி மேற்கொள்ளப்பட்டது. ஒவ்வொரு 50 செ.மீட்டர் ஆழம் செல்லும் அளவிற்கு கொத்துக் கருவிகளைக் கொண்டு மண்ணைக் கொத்தி கிளறி எடுக்கப்பட்டது. அவ்வாறு எடுக்கப்பட்ட மண்ணை மேற்பகுதியில் காணப்படும் மண் (Humas) எனக்கருதப்படுவதால் அதைத் தனியாக அளவீடு எடுத்து, அவற்றை மேற்பரப்பு தனி மண்ணடுக்கில் கிடைத்த தொல்பொருட்களாக கருத்தில் வைத்துக் கொள்வது வழக்கம். இந்த தொல்பொருட்கள் மேற்பரப்பு ஆய்வில் காணப்படும் தொல்பொருட்களோடு ஒப்பிட்டு கணக்கீடு செய்து கொள்ள ஏதுவாக அமையும்.

இவ்வாய்வுக் குழி மொத்தம் 2.25 செ.மீ. ஆழம் வரை ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. கன்னி மண் (Natural soil) காணப்படும் வரை ஆய்வு மேற்க்கொள்ளப்பட்டது. மேற்பகுதியிலிருந்து கன்னி மண் வரை காணப்பட்ட மண் அடுக்குகளை 3 காலக்கட்டங்களைச் சார்ந்தது என மண் அடுக்கில் காணப்பட்ட தொல்பொருட்கள், மண்ணின் தன்மையின் அடிப்படையில் பிரிக்கப்பட்டது.

## அகழாய்வுக் குழி – 2 (TKU - 2)

4 x 4 மீட்டர் நீள அகலத்தில் முதல் அகழாய்வுக் குழியின் தெற்குப் பகுதியில் 2 மீட்டர் இடைவெளி விட்டு ஓர் அகழ்வுக் குழி அமைக்கப்பட்டது. அதன் வரிசையில் TKU - 2 அறிவியல் முறைப்படி ஆய்வு மேற்க்கொள்ளப்பட்டது. இந்த அகழாய்வுக் குழியிலும் 0 - IV, $0^1$ - $IV^1$ எண்கள் இடப்பட்ட முளைக்குச்சிகள் கிழக்கு மேற்காக ஒரு மீட்டர் இடைவெளியில் நடப்பட்டன. இவ்வகழ்வுக் குழியில் அதிக அளவில் கருங்கல் துண்டுகளும், கருங்கல் பலகைக்கற்களும், பெரிய அளவில் காணப்பட்டன. இந்த அகழ்வுக் குழியில் கிழக்கு மேற்காக கருங்கல் தளம் வரிசையாக அமைக்கப்பட்டுள்ளதை காணமுடிகிறது. மையப் பகுதியிலிருந்து சுமார் ஒன்றரை மீட்டர் நீளம் வரை வடக்கு நோக்கி செல்கிறது. இந்த சுவருடைய தடிப்பு (அகலம்) ஒரு மீட்டர் உள்ளது. இங்கு தொடர்ந்து ஆய்வு மேற்க்கொள்ளும்போது இவ்வகழாய்வுக் குழியில் TKU - 1 - இல் காணப்படுவது போலே TKU - 3 - இல் மூன்று காலகட்டத்தைச் சார்ந்த மண் அடுக்குகள் தெற்குப் பகுதியில் காணப்படுகின்றன.

இங்கு காணப்படும் கட்டடத்தின் மேற்பகுதி அந்தக்கட்டடத்தின் அடித்தளமாகக் காணப்படுகிறது. இவ்வகழாய்வுக் குழி 2.60 மீட்டர் ஆழம் வரை கன்னி மண் (Natural soil) காணப்படும் வரை ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

## மாதிரி அகழாய்வுக் குழி – 1 (Trail Trench - 1)

2 x 2 மீட்டர் நீளம் அகலத்தில் கழிக்குளம் கரை மேட்டின் கிழக்குப் பகுதியில் மாதிரி அகழாய்வுக் குழி அமைக்கப்பட்டது. சுமார் ஒரு மீட்டர் ஆழம் சென்றதும் முதுமக்கள் தாழி ஒன்று காணப்பட்டது. 2.30 செ.மீட்டர் ஆழம் வரை ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. முதுமக்கள் தாழி அடிப்பகுதி வரை நன்கு சுத்தம் செய்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. முதுமக்கள் தாழி ஈர பதத்தில் காணப்பட்டதால் பெரும்பாலான பகுதிகள் சிதைந்து மண்ணில் புதைந்துவிட்டது. முழுப்பகுதியாக அகழ்ந்து எடுக்க இயலாமல் போனது. மேலும் நிழற்படங்கள் எடுக்கப்பட்டது. அளவுகள் குறிக்கப்பட்டது.

முதுமக்கள் தாழியின் உள்ளே காணப்பட்ட சிறிய மட்குடுவைகள், தாங்கி, மூடி, போன்றன அப்பகுதியில் அகழ்ந்து எடுக்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது. இவை சிலப்பதிகாரத்தில் இலக்கிய வரிகளில் காணப்படுவதற்கு ஏற்ப "தாழியில் கவிழ்ப்போர் " என்பதற்கு சான்றாகக் கிடைத்ததாக இதனைக் கருதலாம்.

### மாதிரி அகழாய்வுக் குழி – 2 (Trail Trench - 2)

2 x 3 மீட்டர் நீள, அகலத்தில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. மண் கடினமாகக் காணப்பட்டது. தொல்பொருட்கள் எதுவும் காணப்படவில்லை. 2 மீட்டர் ஆழம் வரை ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

### மாதிரி அகழாய்வுக் குழி – 3 (Trail Trench - 3)

2 x 3 மீட்டர் நீள, அகலத்தில் முதல் மாதிரி அகழாய்வுக் குழிக்கு வடக்கே அமைக்கப்பட்டது.

### அகழாய்வில் வெளிப்படுத்தப்பட்ட மண்ணடுக்குகளின் பொதுத்தகவல்கள்

தலைச்சங்காடு அகழாய்வில் 3 காலகட்டங்களைச் சார்ந்த மண் அடுக்குகள் காணப்பட்டன.

### மண்ணடுக்குகள் – 1

மண் கடினமாகவும், சாம்பல் நிறத்தோடும் காணப்பட்டது. இம்மண்ணடுக்கில் சொரசொரப்பான சிவப்பு நிற மட்கலன்களும், உடைந்த காரைத் துண்டுகளும், உடைந்த செங்கல் துண்டுகளும், கூரை ஓடுகளும், காணப்பட்டன. முழுமையாக 5 செங்கல்லும் ஒரே அளவானதாக காணப்பட்டன. இவற்றில் குறிப்பிடும்படியான கருங்கல்லால் ஆன யாளி வரி சிற்பம் வெளிக்கொணரப்பட்டது. இதுபோன்ற யாளி வரி சோழர் காலத்தில் காணப்படும் கோயில்களில் அதிட்டானத்தின் மேற்பகுதியிலும் கொடுங்கைக்கு கீழ்ப்பகுதியிலும் யாளி வரிகள் அமைப்பது வழக்கம். இது போன்ற யாளி வரிகள் இங்கு அகழாய்வில் கிடைத்துள்ளது. எனவே சோழர் காலக் கோயில் ஒன்று இடிபாடுகளுடன் புதைந்து உள்ள பகுதியாக இவை கருதப்படுகிறது.

## மண்ணடுக்குகள் – 2

மண் சற்று எளிமையாகவும், செம்பழுப்பு நிறத்திலும் காணப்பட்டன. இந்த மண்ணடுக்கில் முழுமையான செங்கற்களும், முக்கோண வடிவ செங்கற்களும் கிடைத்துள்ளன. இவை ஒரு கட்டுமானத்தில் இருந்து சேர்ந்து விழுந்தது போல காணப்படுகின்றன. இவற்றுடன் இரும்பு ஆணிகள், கூரை ஓடுகள் போன்ற தொல்பொருட்கள் சேகரிக்கப்பட்டன. இவ்வகழாய்வுக் குழியில் காணப்படும் கூரை ஓடுகள் தலைப்பகுதி “ட” போன்ற கொக்கி வடிவிலும், அடிப்பகுதி அரை வட்ட வடிவிலும் அமையப்பெற்றுள்ளது. இங்கு சிதைந்த சுதையாலான கோயில் கோபுரத்தில் காணப்படும் சிற்பங்களின் பல பகுதிகள் சேகரிக்கப்பட்டன.

இந்த மண்ணடுக்கு முதல் மற்றும் இரண்டாம் சோழர் காலத்தைச் சேர்ந்தவையாக இருக்கக்கூடும் எனக் கருதப்படுகிறது.

## மண்ணடுக்குகள் – 3

இந்த மண் அடுக்கு களிமண் கலந்து மஞ்சள் நிறத்தில் காணப்பட்டது. இங்கு 1.80 மீட்டர் ஆழத்தில் தொடங்கி 2.05 செ.மீ. வரை வடகிழக்கு மூலைப் பகுதியில் குவியலாக சிதைந்த செங்கல் சுவருடைய பகுதி மண்ணில் புதைந்த நிலையில் காணப்பட்டன. இந்த மண்ணடுக்கில் பளபளப்பான மட்கலன்களின் ஓடுகளும், மூடி பகுதிகளும் காணப்பட்டன. இதனையடுத்து மேலும் ஆய்வு மேற்கொள்ளப்பட்ட போது 2.10 மீட்டர் வரை தொடர்ந்து கன்னி மண்ணாக காணப்பட்டதால் ஆய்வு நிறைவு செய்யப்பட்டது.

## அகழாய்வுக் குழி – 1

TKU - 1 மண்ணடுக்குகளைக் கொண்டும் காணப்பட்ட தொல்பொருட்களைக் கொண்டும் “இந்த அகழாய்வுக் குழியில் உடைந்த சுதை உருவங்களும், செங்கற்துண்டுகளும் காணப்படுவதாலும் சோழர் கால யாளி வரி ஒன்று காணப்படுவதாலும் இப்பகுதியில் சோழர் கால கோயில் ஒன்று இருந்து அழிந்து போய்விட்டதற்கான தடயங்களாக இவற்றைக் கருதலாம்.” மேலும்

முதல் குழியின் மூன்றாம் மண்ணடுக்கில் (கன்னி மண் பகுதியில்) கோயிலின் இடிந்த சுவர்ப்பகுதி, தரையிலிருந்து கீழே விழுந்த நிலையில் காணப்பட்டது. இதுவும் தூய்மை செய்யப்பட்டு அப்படியே நிழற்படமும் எடுத்து பதிவு செய்யப்பட்டுள்ளது.

## அகழாய்வுக் குழி – 2

மண்ணடுக்கு – 1 இங்கு மூன்று வரிசைகளில் மண் அடுக்குகள் காணப்படுகின்றன. அவற்றில் முதல் மண்ணடுக்கில் கருங்கற்களை அடுக்கி காரைப் பூச்சுக்களை கொண்டு கற்களை இணைத்து அடித்தளம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளதை காணமுடிகிறது. இதனுடைய அமைப்பு கிழக்கு மேற்காக 1.25 செ.மீ. தடித்து செல்கிறது. இதன் மையப் பகுதியிலிருந்து வடக்கு நோக்கி ஒரு மீட்டர் வரை தொடர்கிறது. இதனுடைய முழுமையான தொடர்ச்சி தொடந்து அகழாய்வுக் குழியில் காணப்படவில்லை. எனவே இங்கு ஒரு அடித்தளப்பகுதி இருந்து சிதைந்து உள்ளதை உறுதி செய்யலாம். முதல் அகழாய்வுக் குழியில் காணப்படும் தொல்பொருட்களின் அடிப்படையில் இக்கருங்கற்களின் தலைப்பகுதி கோயில் அடித்தளமாக இருக்கலாம் என அனுமானிக்கப்படுகிறது.

## மண்ணடுக்கு – 2

கருங்கல் அடித்தளத்தில் கீழே காணப்படும் சுமார் 90 செ.மீ. தடிப்புள்ள மண்ணடுக்கு கிழக்கு மேற்காகச் செல்கிறது. இந்த மண்ணடுக்கின் தொடர்ச்சி அடித்தளத்தில் காணப்படும் மண்ணடுக்கு வரை தொடர்ந்து செல்வதில்லை. கருங்கல் அடித்தளம் செல்லும் இடங்களில் மட்டும் சுமார் 90 செ.மீ. வரை இரண்டாவது மண்ணடுக்கு காணப்படுகிறது. இவை மணலால் நிரப்பப்பட்டுள்ளது. இவை அடித்தளத்தினுடைய உறுதித் தன்மையையும், குளிர்ச்சியையும் அக்கால கட்டடக் கலையினுடைய கட்டுமான சிறப்பினை உணர்த்துவதாக அமைகிறது.

தெற்குப் பகுதியில் காணப்படும் இரண்டாவது மண்ணடுக்கு கடினமாகவும், செம்பழுப்பு நிறமாகவும் காணப்படுகிறது. இவற்றில் பானை ஓடுகளும், கூரை ஓடுகளும் காணப்பட்டன.

## மண்ணடுக்கு – 3

இம்மண்ணடுக்கில் மண் கடினமாகவும், செம்பழுப்பு நிறமாகவும் காணப்படுகிறது. சுமார் 2.60 மீட்டர் ஆழத்தில் கருப்பு சிவப்பு பானை ஓடுகள் காணப்பட்டன. இவற்றுடன் கருப்பு மற்றும் பளபளப்பான சிவப்பு நிறங்களும் காணப்பட்டன. இந்த மண்ணடுக்கில் காணப்படும் தொல்பொருட்களைக் கொண்டும் இப்பகுதியில் இரும்புக்கால பெருங்கற்கள் மக்களின் வாழ்க்கை முறை நிலவி வந்துள்ளதை அறிய முடிகிறது .

## மாதிரி அகழாய்வுக் குழிகள்

இக்குழிகளில் காணப்படும் மண்ணடுக்கு TKU - 2 - இல் காணப்படும் மூன்றாவது மண்ணடுக்கு மாதிரி அகழாய்வுக் குழி மண்ணடுக்குடன் ஒத்துக் காணப்படுகிறது. இங்கு அதிக அளவில் இரும்புக் காலம் அல்லது சங்க காலத்தைச் சேர்ந்த மட்கலங்களாகிய கருப்பு சிவப்பு சிதைந்த ஓடுகளும், முதுமக்கள் தாழியும் காணப்படுவதால் சங்க கால மக்கள் வாழ்க்கை முறை தலைச்சங்காடு பகுதியில் நிலவி இருந்தது என்பதை உறுதி செய்யும் வகையில் இவ்வகழாய்வு அமைந்துள்ளது.

## காலப்பகுப்பு

I. முதற் காலக் கட்டம் : கி.மு. 3000 – கி.பி. 100 வரை – இரும்பு காலம் பெருங்கற்காலம்

II. இரண்டாம் காலக்கட்டம் : கி.பி. 100 – கி.பி. 600 வரை

III. மூன்றாம் காலக்கட்டம் : கி.பி. 600 – கி.பி. 1200 வரை

❋ ❋ ❋

# தொல்பொருட்கள்

தமிழகத்தில் இதுவரை நடத்தப்பட்ட அகழாய்வில் பொதுவாக பானை ஓடுகள், இரும்புப் பொருட்கள், சுடுமண் பொருட்கள், அறுத்த சங்குகள், மணிகள், வட்ட சில்லுகள் போன்றவை கண்டெடுக்கப்பட்டுள்ளன. இவை அக்கால மக்களின் வாழ்க்கை நிலையை நமக்கு தெரிவிக்கின்றன. தலைச்சங்காடு அகழாய்வில் இத்தகைய பல அரிய தொல்பொருட்கள் கிடைத்துள்ளன.

**தொல்பொருட்களின் பட்டியல் : –**

1. கல்வெட்டுகள்
2. கற்சிற்பங்கள்
3. சங்கின் பகுதி
4. செங்கற்கள் - வட்டவடிவு, கூம்பு வடிவு, செவ்வகம் - போன்றன.
5. கருங்கல் துண்டுகள்
6. சுதை சிற்பங்கள்
7. உடைந்த சுதை சிற்பங்கள்
8. பல்வகை மட்பாண்ட ஓடுகள்
9. சுடுமண் கூரை ஓடுகள்
10. கண்ணாடி துண்டுகள்
11. வட்டவடிவ சில்லுகள்
12. சுடுமண் குயவன் வனை கருவி
13. அகல் விளக்குகள்
14. மணிகள்
15. கருப்பு சிவப்பு பானை ஓடுகள்
16. பல்வகை டிசைன் ஓடுகள்

## குழி எண் : 1

### 1. பானை – ஓடுகள் – சங்க காலம் :

1. கலயம் நடுப்பகுதி – உட்குழியானது.
   நீளம் – 7.5 செ.மீ.
   அகலம் 6 செ.மீ.
2. கெட்டியான பானைஓடு தலைக்குக் கீழ் சிறு கீறல்களுடன் வரையப்பட்டது.
   நீளம் – 9 செ.மீ.
   அகலம் 3.5 செ.மீ.
   மண்ணடுக்கு : III ஆழம் : 2.05 மீ.

### 2. உலோகத் துண்டு :

மண்ணடுக்கு : IV ஆழம் : 2.10 மீ.

### 3. இரும்பு அணிகள் :

1. நீளம் : 4. செ.மீ.
2. நீளம் : 6 செ.மீ. – தலைப்பகுதி கொக்கியுடன் கூடியது.
   மண்ணடுக்கு : III ஆழம் : 2.00 மீ.

### 4. பழைய கண்ணாடித் துண்டு :

நீளம் : 6 செ.மீ. அகலம் : 3 செ.மீ

மண்ணடுக்கு : III ஆழம் : 1.90 மீ.

மண்ணடுக்கு : II இரண்டு கண்ணாடிக் துண்டுகள் கிடைத்துள்ளன.

### 5. எலும்புத் துண்டுகள் – கெட்டியானவை :

1. நீளம் : 5 செ.மீ. மண்ணடுக்கு – II
2. நீளம் : 2 செ.மீ. மண்ணடுக்கு – III
   ஆழம் : 1.08 மீ.

**6. அலங்கரிக்கப்பட்ட பானை ஓடு :**

நீளம் : 5 செ.மீ. அகலம் 2.5செ.மீ.

மண்ணடுக்கு : III ஆழம் : 2 மீ.

**7. வட்டவடிவ சில்லு – இடைக்காலம் :**

விட்டம் : 6 செ.மீ. கனம் 1 செ.மீ.

மண்ணடுக்கு : IV ஆழம் : 2.5 மீ.

**8. கெண்டியின் மூக்கு பகுதி – சங்க காலம் :**

நீளம் : 5 செ.மீ.

விட்டம் 3 செ.மீ. நடுவில் துளை உடையது.

மண்ணடுக்கு : IV ஆழம் : 2.07 மீ.

**9. சிவப்பு பானையின் தலைப்பு பகுதி :**

நீளம் : 6.5 செ.மீ. உயரம் 2.5 செ.மீ.

மண்ணடுக்கு : IV ஆழம் : 2.6 மீ.

**10. கெட்டியான சுடுமண் ஜாடியின் அடிப்பகுதி – சங்க காலம் :**

விட்டம் : 6 செ.மீ. கனம் : 1.5 செ.மீ.

மண்ணடுக்கு : IV ஆழம் : 2 . 20 மீ.

**11. கெட்டியான சுடுமண் தட்டின் பிடிப்புப் பகுதி :**

இடைக்காலம் – சிவப்பு பூச்சு உடையது

நீளம் 4 செ.மீ. கனம் 2 செ.மீ.

மண்ணடுக்கு : IV ஆழம் : 2.0மீ.

**12. சுடுமண்பாண்டம் – அழப்பகுதி – உட்குழியானது உடைந்த பகுதி – சிவப்பு நிறம் – இடைக்காலம் :**

நீளம் 10.5 செ.மீ. உயரம் : 4 செ.மீ.

மண்ணடுக்கு : IV ஆழம் : 2.05 மீ.

**13. சுடுமண் அகல் விளக்குகள் :**

1. பெரியது : விட்டம் 7.5 செ.மீ. ஆழம் (உயரம்) : 2.5 செ.மீ.
   மண்ணடுக்கு : IV ஆழம் : 2.02 மீ.
2. சிறியது : விட்டம் 5.0 செ.மீ. உயரம் (ஆழம்) : 1.5 செ.மீ.
   மண்ணடுக்கு : IV ஆழம் : 2.5 மீ.

**14. சால் தலைப்பு பகுதி – கெட்டியானது**

நீளம் : 11 செ.மீ. (உயரம்) அகலம் : 8.00 செ.மீ.

கனம் : 2.5 செ.மீ.

**15. சொரசொரப்பான பானை ஓடு**

நீளம் : 9.00 செ.மீ. அகலம் 5 செ.மீ.

மண்ணடுக்கு : IV ஆழம் : 2.80 மீ.

**16. கூரை ஓடுகள் :**

1. பெரியது – நீளம் 11 செ.மீ. அகலம் 7.5 செ.மீ.
2. சிறியது – கைவிரல் பதிவுடன் கூடியது
   நீளம் : 9 செ.மீ. அகலம் (உயரம்) : 7.00 செ.மீ.
   கனம்: 2.00 செ.மீ.
   மண்ணடுக்கு : V ஆழம் : 3.00 மீ.

**17. கெட்டியான சுடுமண் ஓடுகள் – சிவப்பு :**

1. சால் தலைப்பு பகுதி
   நீளம் : 10 செ.மீ. அகலம் : 5 செ.மீ. கனம் : 2.00 செ.மீ

2. சட்டியின் தலைப்பகுதி

நீளம் : 13 செ.மீ. அகலம் (உயரம்) : 3.00 செ.மீ.

சங்ககாலம்.

மண்ணடுக்கு : III ஆழம் : 0.60 மீ.

## 18. சிறிய வழவில் செங்கற்கள்

## சிவப்பு நிறம் – கெட்டியானது – பல்லவர் காலம் :

1. நீளம் : 13.5 செ.மீ. – சிறியது முழுவதும் உள்ளது.

   அகலம் : 6.5 செ.மீ. பருமன் 3.5 செ.மீ.

2. நீளம் : 7.00 செ.மீ. – பாதி உடைந்தது

   அகலம் : 9.00 செ.மீ. பருமன் 3.5 செ.மீ.

   மண்ணடுக்கு : III ஆழம் : 1.10 மீ.

## 19. உடைந்த சுடுமண்பாண்டம் ஓடுகள் சிவப்பு நிறம் – கெட்டியானவை :

1. சால் – நீளம் : 20.5 செ.மீ. உயரம் : 10.5 செ.மீ. 5 கோடுகள் வரம்பு பகுதியில் உள்ளன.
2. பானை – நீளம் : 15.0 செ.மீ. உயரம் : 7.5 செ.மீ.
3. கலையம் – நீளம் : 17.5 செ.மீ. உயரம் : 5.5 செ.மீ.

   கழுத்து வளைவு மேல் பகுதி

4. சட்டி – நீளம் : 12.5 செ.மீ. உயரம் : 5.5 செ.மீ. உட்குழிவானது

   மண்ணடுக்கு : III ஆழம் : 0.70 மீ.

## 20. வீட்டின் மேற்கூரை தட்டோடுகள் :

பாதி (கீழ்பகுதி) உடைந்தவை. மேல்பகுதி வளைவுடன் பலகை சட்டத்தில் மாட்டுவதற்கு ஏதுவாக சிறிது வளைவுடன் உள்ளன.

1. நீளம் : 6.5 செ.மீ. அகலம் : 4.5 செ.மீ.
2. நீளம் : 8.00 செ.மீ. அகலம் : 4.5 செ.மீ.
3. நீளம் : 7.00 செ.மீ. அகலம் : 4.5 செ.மீ.
4. நீளம் : 6.00 செ.மீ. அகலம் : 4.5 செ.மீ.

மண்ணடுக்கு : III ஆழம் : 1.15 மீ.

## 21. வட்டவழுவ செங்கல் – இடைக்காலம் :

கெட்டியானவை – உறுதியானது.

விட்டம் : 14.0 செ.மீ. பருமன் 4.5 செ.மீ.

மண்ணடுக்கு : IV ஆழம் : 2.65 மீ.

## 22. சுதை உருவம் :

தலைக்குப் பின் தீசுவாலைப் பகுதி இடையிடையே சிறுசெங்கல் பதிக்கப்பட்டுள்ளவை.

உயரம் : 16 செ.மீ. அகலம் : 9 செ.மீ. கனம் : 8.5 செ.மீ.

## 23. சிரசுச் சக்கரம் பகுதி – சுதை உடைந்தது :

உயரம் 9.00 செ.மீ. அகலம் 8 செ.மீ, கனம் 3 செ.மீ.

மண்ணடுக்கு : III ஆழம் : 1.20மீ.

## குழி எண் : 2

## 1. உடைந்தது – கெட்டியானது – சுடுமண் பொம்மை :

உடலின் ஒரு பகுதியே கிடைத்துள்ளது. தலை – கால் உடலின் இடது பக்கம் இல்லை.

உயரம் (நீளம்) : 8.0 செ.மீ. அகலம் : 4.5 செ.மீ.

மண்ணடுக்கு : II ஆழம் : 0.50 செ. மீ.

**2. சிறிய பாசி மணி – 1**

மண்ணடுக்கு : I ஆழம் : 0.45 மீ.

**3. சுடுமண் பெரிய விளக்கு :**

நடுவிலும் உட்குழிவானது கோயில் உண்ணாழியில் நீண்ட நேரம் எரிவது கெட்டியானது. பாதி பகுதியே கிடைத்துள்ளது.

நீளம் : 9.5 செ.மீ. அகலம் : 6.5 செ.மீ. கனம் : 2.00 செ.மீ.

மண்ணடுக்கு : II ஆழம் : 0. 85 மீ.

**4. அகல்விளக்குகளின் – உடைந்த பகுதிகள் : 2**

1. நீளம் : 5.05 செ.மீ. அகலம் : 3 செ.மீ, உயரம் : 2.00 செ.மீ.
2. நீளம் : 5.00 செ.மீ. அகலம் : 4.05 செ.மீ, உயரம் : 2.00செ.மீ.
3. கெட்டியான பானை ஓடு – 1

   நீளம் : 5.5 செ.மீ. அகலம் : 3.05 செ.மீ.
4. அலங்கரிக்கப்பட்ட மட்கலம் சட்டியின் தலைப்பகுதி உடைந்தது

   நீளம் : 4.5 செ.மீ. உயரம் 3.5 செ.மீ.

**5. உடைந்த சுடுமண் பகுதிகள் :**

1. அகல் விளக்கு

   நீளம் : 5.5 செ.மீ. அகலம் : 2.5 செ.மீ. உயரம் : 2.00 செ.மீ.
2. கிண்ணம்

   நீளம் : 6 செ.மீ. உயரம் : 2.5 செ.மீ.

3. கலயத்தின் தலைப்பகுதி

நீளம் : 5.00 செ.மீ. உயரம் : 4 செ.மீ.

மண்ணடுக்கு : II ஆழம் : 1. 05 மீ.

## 6. இரும்பு ஆணி – மரப்பலகையில் அழுத்தது :

நீளம் : 8.00 செ.மீ. கனம் : 1.00 செ.மீ. துருபிடித்து விட்டது.

இடைக்காலம்

மண்ணடுக்கு : III ஆழம் : 1. 10 மீ.

## 7. பாதி உடைந்த வட்டவழுவ சில்லு – கெட்டியானது :

ஆழம் : 3.00 செ.மீ. விட்டம் : 6 செ.மீ. கனம் : 1.5 செ.மீ.

சிவப்பு நிறம் – இடைக்காலம்

மண்ணடுக்கு : II ஆழம் : 0. 85 மீ.

## 8. கெண்டியின் மூக்குப் பகுதி :

சுடுமண்ணால் ஆனது கழுத்து உடைந்த பகுதி.

உயரம் : 4.00 செ.மீ.

அகலம் : 3 செ.மீ. நடுவில் துளை உடையது.

மண்ணடுக்கு : II ஆழம் : 1. 20 மீ.

## 9. சுடுமண் வட்ட வழுவ சில்லுகள் :

கெட்டியானது – சிவப்பு நிறம் :

1. பெரியது : விட்டம் 4.5 செ.மீ
2. சிறியது : விட்டம் 3.00 செ.மீ

   மண்ணடுக்கு : III ஆழம் : 1. 85 மீ

## 10. சங்க கால கூரை ஓடு :

கெட்டியானது – உடைந்த பகுதி, இடையில் சற்று குழிவும் – வரம்பு கோடும் உள்ளது.

நீளம் : 7 செ.மீ. (அகலம்), உயரம் (அகலம்) : 6 செ.மீ.

கனம் : 2.00 செ.மீ. மண்ணடுக்கு : III ஆழம் : 2.5 மீ.

**11. உறைகிணறு :**

உடைந்த மேல்பகுதி - சங்க காலம்

உயரம் : 6 செ.மீ. அகலம் 5 செ.மீ.

வெளியே சிவப்பு - உள்ளே கருப்பு நிறம்

மண்ணடுக்கு : III ஆழம் : 1.05 மீ.

**குழி எண் : 3**

**முதுமக்கட் தாழி உள்ளே கிடைத்தவை**

சுடுமண் கருப்பு நிற தாங்கி - உடைந்தது.

உயரம் : 8 செ.மீ. விட்டம் 10.5 செ.மீ.

மேல் குமிழ் (தாமரை மொட்டு போல) பகுதி - கருப்பு வண்ணம் - உடைந்து விட்டது.

நீளம் : 9.5 செ.மீ. விட்டம் : 5 செ.மீ. உள்ளீடானது - சங்க காலம்.

மண்ணடுக்கு : திடல் முழுதும் மணல் மண் : ஆழம் : 1.00 மீ.

* * *

# சிற்பங்களும் – கல்வெட்டுகளும்

## 1. சிற்பங்கள்

தலைச்சங்காடு அகழாய்வுப் பணிகளில் பெருங்கற்காலம் முதல் நாயக்க மன்னர்கள் காலம் வரையிலான தொல்லியல் தடயங்கள் நமக்கு தொடர்ந்து கிடைத்து உள்ளன. இப்பகுதியில் தலைச்சங்காட்டில் கிடைத்த முதலாம் பராந்தகச் சோழன் காலத்து சிற்பங்கள், கல்வெட்டுகள் பற்றி எடுத்துரைக்கப்படுகின்றன.

### அ. யாளி வரி

அகழாய்வில் இரண்டு "சிற்பங்கள் யாளி வரி " கிடைத்துள்ளன. இவை முதற்குழியில் மண்ணடுக்கு இரண்டில் கிடைத்தன. சோழர் காலத்தில் கோயில் கட்டும் போது அடி பீடம் முதல் உச்சி கலசம் வரை பல பகுதிகள் மிகவும் அழகாகவும், நேர்த்தியாகவும் செய்து சுவர்களில் பதிக்கப்பட்டன. இதில் அதிட்டானம், ஜகதி, குமுதம், பட்டிகை, பதுமத்தூண், தேவக்கோட்டங்கள், மேலே கொடுங்கை வரை பல அமைப்புகள் வைத்து கட்டப்பட்டுள்ளன.

இங்கு அகழாய்வில் கிடைத்த சிற்பங்களில் யாளி வரி குறிப்பிடத்தக்கதாகும். பொதுவாக யாளி என்ற மிருகம் யானைக்கு முற்பட்டதாகவும், அதைவிட பெரிய அமைப்பாகவும் சிற்பத்தில் கோயில்களில் காட்டப்படுகின்றது. யாளி வரி என்ற அமைப்பு – யாளியின் தலைப்பகுதி அல்லது யாளியின் சிறிய உருவமே அமைப்பில் வரிசையாக அமைத்துக் காட்டுவர். இது முற்காலச்சோழர் காலத்தில் கட்டடத்தின் மேலே உள்ள கொடுங்கைக்கு கீழே அமைத்து கட்டப்படும். பல இடங்களில் குள்ள பூதங்களின் வரிசையும் இடம் பெற்றுள்ளன.

தலைச்சங்காட்டில் யாளி வரி சற்று வித்தியாசமாகச் சிற்பி வடிவமைத்துள்ளார். அதாவது நன்கு திறம்படப் பிறந்து வளரும் யாளியின் குட்டி வடிவத்தின் தலைப் பகுதியை நமக்குப் படம் பிடித்துக்

காட்டியுள்ளார். கிடைத்துள்ள சிற்பங்களில் குட்டி யாளியின் வடிவம் நம்மை வியக்க வைக்கிறது. முற்கால சோழரின் கலைப் பாணி இங்கு முத்திரைப் பதித்துள்ளது. ஒவ்வொரு துண்டு சிற்பத்திலும் தலா நான்கு - நான்கு யாளியின் குட்டி வடிவங்களை வடித்து சிற்பி தனது திறமையை வெளிப்படுத்தியுள்ளார்.

## ஆ. விருத்த குமுதம்

தலைச்சங்காடு இரண்டாம் குழியின் முதல் மண் அடுக்கில், "விருத்த குமுதம்" எனும் கட்டடச் சிற்பம் ஒரு பெரிய அமைப்பு கிடைத்துள்ளது. அதாவது கோயிற் கட்டடக்கலையில் அடிபீடத்திற்குமேல், "குமுதவரி" என்ற அமைப்பு இடம்பெறும். இதில் 1. முப்பட்டை குமுதம், 2. எண்பட்டை குமுதம், 3. பத்ம குமுதம், 4. விருத்த குமுதம் என்ற பிரிவுகளில் ஸ்தபதிகள் வடிவமைத்துக் கட்டுவது மரபாக உள்ளது. இவை நேர்த்தியான கருங்கல்லில் திறம்பட வடிவமைத்து செய்யப்படுவதால் கோயில் சுவர்ப் பகுதியிலேயே - விருத்த குமுதம் - வழுவழுப்பாகவும், சுவர்ப் பகுதிக்கு சற்று வெளியே நீட்டிக்கொண்டு புடைப்பாகவும் பார்ப்பவர்களின் கண்ணைக் கவரும்படி அழகான தோற்றமுடன் காட்சி தரும்.

தலைச்சங்காட்டில் 2½ அடி நீளம், ஒரு அடி அகலம், ¾ அடி கனம் உடையதாக சிறப்பான வேலைப்பாட்டுடன் ஒரு பகுதி சிற்பம் மட்டும் கிடைத்துள்ளது. இதுவும் முற்காலச் சோழரின் கலைத் திறமையை நமக்கு எடுத்துக்காட்டுவதாக அமைகிறது.

## இ. சுதைச் சிற்பங்கள்

தலைச்சங்காட்டில் - இரண்டு அகழாய்வுக் குழிகளிலும் (1) கருங்கல் கட்டடப் பகுதிகள் (2) செங்கல் கட்டடப் பகுதிகள் (3) கருகங்கற் சிற்பங்கள் (4) சுதைச் சிற்பங்கள் (5) சுடுமண் சிற்பம் ஒன்று ஆகியன கிடைத்துள்ளன,

சுதைச் சிற்பங்கள் கோயிலின் விமானப் பகுதியோடு கீழே இடிந்து விழுந்ததால் பெரும்பாலும் உடைந்து விட்டன. தலைப் பகுதி, உடல் பகுதி, கைப் பகுதிகள் என சில உதிரியாகக் கிடைத்துள்ளன. இவை இறை

உருவங்கள் எனத்தெரிகிறது. இவ்வுருவங்களும் சுதை கொண்டு உறுதியாக வடிவமைக்கப்பட்டுள்ளன. நீண்டகாலம் பூமிக்கு அடியில் இருந்ததால், சற்று பொலிவிழந்து காணப்படுகின்றன.

### ஈ. சுடுமண் சிற்பம்

தலைச்சங்காடு அகழாய்வில் இரண்டாவது குழியில் மண் அடுக்கு மூன்றில் உடைந்த நிலையில் சுடுமண்சிற்பம் ஒன்று சேகரிக்கப் பட்டுள்ளது. இது கெட்டியாகவும், உறுதியாகவும் உள்ளது. இதுவும் சங்க காலத்தில் வழிபாட்டில் இருந்த இறை உருவமாக இருக்க வேண்டும் எனத் தெரிகிறது. கூர்ந்து கவனித்தால் பிள்ளையாரின் தலைப்பகுதி போல உள்ளது. இது மேலும் ஆய்வுக்குரியது.

## 2. கல்வெட்டுச் செய்திகள்

தலைச்சங்காட்டில் அகழாய்வு செய்வதற்கு முன்பே நமக்கு ஆதாரமாக கிடைத்தது, முற்காலச் சோழரின் கல்வெட்டுச் சான்றாகும். அதாவது இங்குள்ள ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியின் பின்புறம் உள்ள புஞ்சைத் திடலை விளையாட்டு மைதானமாக ஆக்குவதற்கு பணிகள் ஏற்பாடு செய்தனர். அப்போது புல்டோசர் மெஷின் கொண்டு திடலின் மேடு பள்ளங்கள் சமன் செய்யப்பட்டன. அப்போது பூமிக்கு அடியில் மூன்று அடி ஆழத்தில் இருந்து ஒரு கருங்கல் துண்டு மேலே கொண்டு வரப்பட்டது. அது கோயிலின் சுவரில் செதுக்கி வைத்து பதிக்கப்பட்டது என்பது தெரிந்தது. அதனைத் தூய்மை செய்து பார்த்ததில் அதில் சோழர்காலக் கல்வெட்டு பொறிக்கப்பட்டிருப்பதும் தெரிய வந்தது. உடன் அப்பகுதியில் வசிக்கும் வரலாற்று ஆர்வலர்கள் புலவர் திரு. நா. தியாகராசன் மற்றும் புலவர் திரு. மணி ஆகியோர் தரங்கம்பாடி – காப்பாட்சியர் திரு. கோ. முத்துசாமி அவர்களுக்கு தகவல் அளித்தார்கள். உடன் அங்கு சென்று ஆய்வு செய்யப்பட்டது. அதன் எழுத்தமைதியைக் கொண்டு முதலாம் பராந்தகச் சோழர் காலக் கல்வெட்டு என்பது உறுதி செய்யப்பட்டது. மேலும் இப்பகுதியில் அகழாய்வு செய்தால் பல அரிய வரலாற்றுச் சான்றுகள் கிடைக்கும் என்றும் தலைமையகத்திற்கு பரிந்துரை செய்யப்பட்டது. எனவே பூம்புகார் தலைச்சங்காட்டில் அகழாய்வுப் பணிக்கு அனுமதி கிடைத்தது.

## அ. பூமிக்கு அடியில் கிடைத்த – கல்வெட்டின் தலைப்பு பகுதி

இக்கல்வெட்டு *ஸ்வஸ்திஸ்ரீ* என்று தொடங்குகிறது. தலைச்சங்காடு என்னும் பேரூர் எந்த நாட்டில் எந்த கூற்றத்தில் இருந்தது என்ற செய்தியும் குறிப்பிடப்பட்டுள்ளது. நாழி - என்ற முகவை அளவைக் குறிக்கும் சொல்லும் உள்ளது. முடிவில் ரச்சை என்று முடிக்கப்பட்டுள்ளது. 1½ x 1½ அடி - நீளம் மற்றும் அகலம் உடைய இந்த துண்டுக் கல்வெட்டின் மூலம் ஓரளவே செய்தி அறிய முடிகிறது. இதன் தொடர்ச்சி வேறு கல்லில் அல்லது கோயிலின் அடிப்பாகச் சுவரில் இன்னும் வேறு இடத்தில் பூமிக்கு அடியில் உள்ளதையும் உணர முடிகிறது. இதில் உள்ள எழுத்துகள் வட்டெழுத்தில் இருந்து தமிழாக மாறிவரும் நிலையில் எழுத்தமைதியைக் காணமுடிகிறது. எனவே இது முதற்பராந்த சோழன் காலம் (907 - 955) எனவும் தெரியவருகிறது.

மேலும் இம்மன்னன் ஆட்சிக் காலத்தில், காவிரியாறு கடலில் சென்று கலக்கும் பகுதியும் தனது முன்னோர் காலத்தில் தலைநகரமாக இப்பகுதி இருந்தமையால் இவ்வூருக்கு வடக்கில் சுமார் 15 கி.மீ. தூரத்தில் அமைந்துள்ள பெருந்தோட்டம் என்ற ஊரிலும் ஒரு சிவன் கோயில் கட்டியுள்ளான். அதுவும் இடிந்து பூமிக்கு அடியில் இருந்தது தரங்கை காப்பாட்சியரால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. பெருந்தோட்டத்துக்காரர் ஒருவர் தனது வயலின் நடுவில் பள்ளம் தோண்டிய போது, பழைய சிவன் கோயிலில் இருந்த கருங்கல் தூண் ஒன்று கிடைத்தது. அதிலும் பராந்தகச் சோழனது கல்வெட்டு இடம் பெற்று உள்ளதும் செய்தியாக வெளியிடப்பட்டுள்ளது.

தற்போது தலைச்சங்காட்டின் வடமேற்கில் உள்ள புஞ்சையில் (கிடாரங்கொண்டான்) இரண்டாம் பராந்தகச் சோழன் கட்டிய ஸ்ரீநற்றுணை ஈசுவரமுடையார் கோயில் நமக்கு காட்சி அளிக்கிறது. இங்குள்ள தூண்கள், கோட்டச் சிற்பங்கள், புராண வரலாறு கூறும் புடைப்புச் சிற்பங்கள், அகன்ற விமானம் இவைகள் முற்காலச் சோழ மன்னர்களின் கோயிற் கலைச் சிறப்பினை உலகிற்கு எடுத்துக் காட்டுவதாக அமைந்துள்ளன.

எனவே இங்கு அகழாய்வில் கிடைத்த சிற்பங்கள், கல்வெட்டு, இவை முற்கால சோழரின் பெருமைகளை நமக்கு எடுத்துக்காட்டுகின்றன.

## ஆ. சத்திரம் கல்வெட்டு

தலைச்சங்காடு எனும் பேரூர், கிழக்குக் கடற்கரை சாலையில், புராணகாலச் சிறப்புடைய சிதம்பரத்திற்கும், திருக்கடையூருக்கும் நடுவில் அமைந்துள்ள திருத்தலம் ஆகும். முற்காலத்தில் வாகன வசதி இல்லாத போது பக்தர்கள் வழிப்போக்கர், வணிகர்கள், இரவு நேரத்தில் இவ்வூரில் தங்கி இளைப்பாறி செல்வதற்காக, அகழாய்வு செய்துள்ள இந்த திடல் பகுதியில் ஒரு தர்ம சத்திரம் கட்டி இருந்தனர். காலப்போக்கில் சத்திரம் அமைந்திருந்த செங்கல் கட்டடத்தில் மக்கள் வந்து தங்காததால், அதில் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளி ஆரம்பிக்கப்பட்டது.

நாளடைவில் சத்திரம் பழுதுபட்டு இடிந்து விட்டது. அதில் பதிக்கப்பட்டிருந்த பலகைக் கல்வெட்டு ஒன்று நாயக்க மன்னர் காலத்தில் (கி.பி. 1825 – இல்) தரங்கம்பாடியைச் சேர்ந்த வீரப்ப செட்டியார் என்பவர் தலைச்சங்காட்டில் வழிப்போக்கர்கள் தங்கிச் செல்வதற்காக தர்மசத்திரம் கட்டி தந்துள்ளார் என்றும், அந்த சத்திரம் விசுவாசு வருடம் கார்த்திகை மாதம் இரண்டாம் தேதி அன்று தர்ம சத்திரமாகக் கட்டி அளிக்கப்பட்டுள்ள செய்தியையும் நமக்குத் தெரியப்படுத்துகிறது.

எனவே முதலாம் பராந்தகச் சோழன் முதல் நாயக்க மன்னர் காலம் வரையிலான கல்வெட்டு ஆதாரங்களும் கிடைத்துள்ளன.

சத்திரம் அழிந்த பிறகு தான், இப்பகுதியில் அரசின் மூலம் புதிய கட்டடங்கள் கட்டித் தரப்பட்டுள்ளன. தொடக்கப் பள்ளி நடுநிலைப் பள்ளியாக உயர்வு பெற்று தற்போது நல்ல முறையில் இயங்கி வருகிறது என்பதையும் அறியலாம்.

❋ ❋ ❋

# முடிவுரை

தலைச்சங்காட்டில் மேற்கொள்ளப்பட்ட அகழாய்வில் கிடைத்த கருப்பு சிவப்புப் பானை ஓடுகள், முதுமக்கள் தாழி ஆகியவை கிடைத்துள்ளன. எனவே, இரும்பு காலம் முதல் அதாவது சுமார் 3000 ஆண்டுகளுக்கு முன்பே இங்கு மக்கள் வாழ்ந்திருந்தனர் எனத் தெரிகின்றது. சங்ககாலச் சோழர்களின் காலத்தில் சிறந்த துறைமுகமாகவும், இரண்டாவது தலைநகரமாகவும் இருந்த பூம்புகாரை அடுத்துள்ளதால் சோழர்களின் காலத்திலும் இவ்வூர் சிறப்புற்றிருந்ததை அகழாய்வில் கிடைத்துள்ள தொல்பொருட்கள் மூலம் அறிய முடிகிறது. குறிப்பாக தலைச்சங்காட்டில் முதலாம் பராந்தகச் சோழன் காலத்தில் (கி.பி. 907 - 955) கோயில் ஒன்று இருந்துள்ளதை, கல்வெட்டுகள் மற்றும் கோயில் கட்டட இடிபாடுகள் மூலம் அறியமுடிகிறது. எனவே பண்டையச் சிறப்பு மிக்க ஊர்களில் ஒன்றாக தலைச்சங்காடு இருந்துள்ளதையும், சோழர் காலத்தியக் கோயில் ஒன்று இருந்துள்ளதும். இவ்வூரின் பழமையைப் பறைசாற்றி நிற்கின்றன என்றால் அது மிகையானதல்ல.

❋ ❋ ❋



அகழாய்வுக்கு தெரிவு செய்யப்பட்ட இடம்



தொல்லியல் துறை பொறியாளர்கள்
அகழாய்வு நடைபெற உள்ள பகுதியை
காண்டூர் சர்வே செய்தல்



அகழ்வுக்குழி : I - தெற்கு - கிழக்கு - பக்கம்
மண்ணடுக்குகளின் தோற்றம்



அகழ்வுக் குழியில் காணப்படும்
சிதைந்து விழுந்த கட்டப்பட்ட பகுதி



அகழ்வுக்குழி : II - கோயில் கட்டுமானத்தின்
அடிப்பகுதியின் தோற்றம்



அகழ்வுக்குழி : I - இன் புறத்தோற்றம்



முப்பரிமாண வடிவ அளவீட்டு
முறையில் அளவெடுத்தல்



அகழ்வுக்குழி : 2 - இல் காணப்படும்
கருங்கற்கள் தோற்றம்



அகழ்வுக்குழி : III - இன் தோற்றம்



அகழ்வுக்குழி II - கருங்கல் கட்டுமான அமைப்பின் தோற்றம்



கழிக்குளம் - தலைச்சங்காடு



மாதிரி அகழ்வுக்குழி அமைய உள்ள பகுதி - கழிக்குளம் திடல்



மாதிரி அகழ்வுக்குழியில்
காணப்படும் முதுமக்கள் தாழி



முதுமக்கள் தாழியின்
உள்ளிருந்து எடுக்கப்பட்ட
கருப்பு - சிவப்பு மட்கலன்



மாதிரி அகழ்வுக்குழி
கருப்பு - சிவப்பு மட்கலன் -
பெருங்கற்காலம்



கழிக்குளம் திடல் மாதிரி குழியில்
முதுமக்கள் தாழியை
அகழ்ந்து வெளிப்படுத்துதல்



அகழாய்வு நடைபெறும் இடத்திற்கு
அருகில் கிடைத்த முற்கால சோழர்,
நாயக்கர் காலக் கல்வெட்டுகள்



அகழாய்வில் கிடைத்த முற்கால
சோழர் கோயில் - யாளிவரி பகுதி



முதுமக்கள் தாழியில் கிடைத்த
சுடுமண் பொருட்கள் தாங்கி,
மூடி பகுதிகள்



அகழாய்வில் கிடைத்த
சொருகு ஓடுகள்




அகழாய்வில் சேகரிக்கப்பட்ட
சுடுமண் பொருட்கள் -
செங்கற்கள் - ஓடுகள்



உடைந்த செங்கற்பகுதிகள்



சங்ககால சுடுமண் கூரை ஓடு



சோழர்கால வேறுபட்ட
அளவிலான செங்கற்கள்



அகழாய்வில் கிடைத்த மட்கலன் ஓடுகள்



சோழர்கால சுடுமண் கூரை ஓடுகள்



அகழாய்வில் காணப்பட்ட சுதை உருவங்களின் பகுதிகள்



அகழாய்வில் கிடைத்த சிதைந்த
சுதை உருவங்கள்



பெண்கள் விளையாட
பயன்படுத்திய
வட்ட வடிவ சில்லுகள்



அகழாய்வில் கிடைத்த
சுடுமண் அகல் விளக்குகள்



அகழ்வாய்வில் கிடைத்தவை:
பாசி மணிகள், கல் மணிகள்



சுடுமண் கெண்டியின்
மூக்குப் பகுதிகள்



முதுமக்கள் தாழியில் கிடைத்த
சுடுமண் கலயம்
அதில் குறியீடு உள்ளது



முதுமக்கள் தாழியின் உள்ளிலிருந்து
எடுக்கப்பட்ட சுடமண் கலயம்



முதுமக்கள் தாழியினுள்ளிருந்து
எடுக்கப்பட்ட மட்கிய
நிலையில் இரும்பு நெடுவாள்



முதுமக்கள் தாழியின் உள்ளிருந்து
கிடைத்த குடிநீர் கலயம்



முதுமக்கள் தாழியிலிருந்து எடுக்கப்பட்ட
சுடுமண்ணாலான பறவை மற்றும் பிற
வேலைப்பாடுகளுடன் கூடிய
மேல்பிடியுடன் கூடிய மூடிகள்



கண்ணாடித் துண்டுகள்



இரும்பு ஆணிகள்



பானை ஓட்டில் பூ வேலைப்பாடு



சுடுமண் விநாயகர் வடிவம்



பச்சை வண்ண கண்ணாடித் துண்டுகள்







